**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 01 - 2018**

---

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 01 இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2015 செப்தெம்பர் 17 ஆந் திகதிய 3267 – (எஸ்ஆர்ஜ) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.06 (அ) ஆம் உறுப்புரை மற்றும் 3268 – எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.03 (அ) ஆம் உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

நிழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்டிக்கையின் பிரகாரம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவரக உள்ளது. நிகழ்ச்சித்திட்டப் பகுதியில் விவசாயத்திற்கான நீர் வளங்கள் மற்றும் குடிதண்ணீர் நோக்கத்திற்கான பாதுகாப்பான நுழைவுகளே நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 28,713 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 190 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 22,668 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகையான ரூபா 6,045 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 செப்தெம்பர் 17 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான

குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1. நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் மீதான பௌதீக முன்னெற்றம்

நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 03 பிரதான கூறுகளின் கீழ் அமுலாக்கப்பட வேண்டுஅமன எதிர்பார்க்கப்பட்டதுடன் வேலைகளின் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

| கூறுகள் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | | |
| உயர்நில எலகர கால்வாய் நிர்மாணம் | 19.54 | 13.45 | ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம் மற்றும் ஒப்பந்தகாரர்களால் வேலைகளை தற்காலிகமாக நிறுத்துதல் | வேலைகளை பூர்த்தியாக்குவதில் தாமதம் மற்றும் கிரய அதிகரிப்பிற்கான சாத்தியம் | ஒப்பந்தத்தின் கீழான நடவடிக்கைகள் தாமதமாக தொடங்கப்பட்டிருந்தன. |
| வட மேல் மாகாண கால்வாய் நிர்மாணம் | 37.94 | 25.55 | ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம் மற்றும் வழங்கப்பட்ட வேறு 02 ஒப்பந்தங்களின் கீழ் அமுலாக்கப்பட்ட வேலைகளின் மெதுவான முற்னேற்றம் | பங்குடமையாளர்களிற்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் கிடைத்திருக்கவில்லை. | வடிவமைப்பு வேலைகள் மற்றும் காணிச் சுவீகரிப்பிலுள்ள குறைபாடுகள் காரணமாக |
| மினிப்பே வலதுகரை புனரமைப்பு | 41.27 | 35.55 | ஒப்பந்தகாரர்களால் ஒப்பந்த நடவடிக்கைகள் அமுலாக்கலில் மெதுவான முற்னேற்றம் | - | சிவில் நிர்மாண வேலைகள் வடிவமைத்தலின் குறைபாடுகள் காரணமாக |

முகாமைத்துவதின் பதில் — ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றலால் தடைபட்ட வேலைகளை திரும்ப தொடங்குதல் வடிவமைப்பு வேலைகளின் மாற்றம் என்பன காரணமாக வேலைகள் தொடங்குவதில் தாமதம் மற்றும காணிச் சுவீகரிப்பு பிரச்சனைகள் போன்றவற்றிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

கணக்காய்வாளருடைய சிபார்சுகள் — ஒப்பந்த பொதிகளின் கீழ் செயற்திட்டத்தால் குறிப்பிடப்பட்ட கால வரையறைகுள் சிக்கனமான கிரயத்தில் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு இயலக்கூடியாறு நெருக்கமாக கண்காணிக்கப்பட வேண்டிய சிவில் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்க வேண்டிய தேவையிருந்தது.

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| அ) | வீமடில்ல இடது கரை பிரதான கால்வாயின் புனரமைப்பு மற்றும் வட மேல் கால்வாயின் நிர்மாண வேலைகளின் கீழ் கிளைக் கால்வாயின் நிர்மாணம் என்பவற்றின் ஒப்பந்த காலப்பகுதி 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்திருந்த போதிலும், பாலங்களின் புனரமைப்பு, குளித்தல் படிக்கட்டுகள் மற்றும் 50 மலசலகூடங்களின் சுழற்சிக் கட்டமைப்பு என்பன பூர்த்தியாக்கப்படாமல் இருந்தது.<br>மேலும், 4+424 கிலோமீற்றரில் பிரதான கால்வாய் புனரமைப்பு வேலைகள் தொடங்கப் பட்டிருக்கவில்லை. வேலைத்தள பொறியியலாளரால் கட்டமைப்பு வடிவமைப்பு சமர்ப்பிப்பதிலுள்ள தாமதம் மற்றும் காணித் தகராறுகளில் எழுந்த பிரச்சனைகள் என்பன காரணமாக 10 தடவைகள் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த கிரயம் அதிகரித்தது | ஒப்பந்தகாரர் விவசாயிகளின் வேண்டுகை, ஒப்பந்ததததை வடிவமைத்தல் பிரச்சனைகள் மற்றும் காணிச் சுவீகரிப்பு பிரச்சனைகள் என்பவற்றால் டெவகுவ மற்றும் வீமடில்ல நீர்பாசனமற்ற பகுதிகளிற்கான தண்ணீர் பிரச்சனைகள் காரணமாக வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு இயலாதிருந்தது. | எதிர்பார்க்கப்படாத தாமதங்கள் மற்றும் அவற்றின் மீது ஏற்படுகின்ற கிரயம் என்பவற்றினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ஆ) 2018 யூலை 05 இல் வழங்கப்பட்ட நாபடஹகவத்த முதல் மஹகின்டுல வரை நீர்த்தேக்கம் மற்றும் சுரங்கவழி பிரதான கால்வாயின் நிர்மாணங்களிற்கான ஒப்பந்தங்கள் ஒப்பந்தகாரருக்கு வேலைத்தளம் கையளிப்பதிலுள்ள தாமதம் காரணமாக 2018 நவம்பர் 01 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த கிரயம் அதிகரிப்பதுடன் வேலைகளின் பூர்த்தியாக்கலில் தாமதம் ஏற்படும். | மதிப்பீட்டு வேலைகள் உள்ளடங்கலாக காணிச் சுவீகரிப்பு பூர்த்தியாக்கலில் தாமதம் காரணமாக பட்டியலிடப்பட்டவாறு ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட ஒப்பந்தம் அடையப்படாமைக்கு பிரதான காரணமாக இருந்தது. | |
| இ) மேல் கரை எலகர கால்வாய் செயற்திட்டத்தின் கீழ் மொறஹாகந்த நீர்த்தேக்கம் முதல் கொங்கேரிய குளம் வரையான கால்வாயின் நிர்மாணத்தின் பௌதீக முன்னேற்றமானது ஒப்பந்தகாரரரால் 03 மாதங்களிற்கு மேல் வேலைகளை நிறுத்தியிருந்தமை காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 சதவீதமான வேலைகள் பூர்த்தியாக்க வேண்டிய போதிலும் 27 சதவீத மெதுவான முன்னெற்றத்தை காட்டியிருந்தது. | ஒப்பந்த கிரயம் அதிகரித்தது | ஒப்பந்தகாரருடைய நிதி ஆபத்து காரணமாக 2018 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரை வேலைகளை நிறுத்தியிருந்தது. ஒப்பந்தகாரர் 2018 திசெம்பர் இறுதியில் திரும்ப தொடங்கியிருந்ததுடன் வேலைகள் தற்பொது தொடருகின்றன. | எதிர்பார்க்கப்படாத தாமதங்கள் மற்றும் அவற்றின் மீது ஏற்படுகின்ற கிரயம் என்பவற்றினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3. சுற்றாடல் விடயங்களுடன் தொடர்புபட்ட பிரச்சனைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| காட்டுப் பகுதியில் 50 ஹெட்டெயரில் மரங்கள் மீளநடுதல் உள்ளடங்கலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வனவள பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் ஒப்பந்தகாரருக்கு இடையில் புரிந்துணர்வு விஞ்ஞாபனமொன்று கைச்சாத்திட்டிருந்த போதிலும் கட்டைகளை | மண்ணரிப்பு மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்த பாதிப்பின் சாத்தியம் | ஒப்பந்தகாரரின் பாதகமான நிதி நிலைமையால் விளைந்த குறைவான செயலாற்றல் காரணமாக மீள காடுவளர்த்தல் பணிகள் தொடங்கப் பட்டிருக்கவில்லை. | மீள காடுவளர்த்தல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் என்பவற்றிற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அகற்றல், சுட்றாடல் பாதுகாப்பு மீது பொதுமக்களிற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தல் போன்றன 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4. குறைவாகப்பயன்படுத்திய வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- |
| கலேவெல பிரதேச செயலகத்தில் 443 காணித்துண்டுகள் காணிச் சுவீகரிப்பிற்காக இனங்காணப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 82 காணித் துண்டுகள் சுவீகரிக்கப்பட்டிருந்தது. மாத்தளை மற்றும் கலேவெல பிரதேச செயலகங்களிற்கு ரூபா 233.90 மில்லியன் தொகை அனுப்பப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 103.8 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | தொடங்கப்பட்டிருக்கவில்லை. | வேலைகள் சுமூகமாக தொடருவதற்கு இயலக்கூடியவாறு காணி சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |